[செல்வி ஜெ ஜெயலலிதா] [2015 ஆகஸ்ட் 25

10 கோடி ரூபாய் செலவிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் இதுவரை அறிவித்த திட்டங்கள், அரசு மருத்துவமனைகளின் செயல்பாடுகள் மேலும் சிறந்து விளங்கவும், அதன்மூலம் தரமான உயர்தர மருத்துவச் சேவை தங்குதடையின்றி, ஏழை எளிய மக்களுக்குக் கிடைக்கவும், ஒளிபடைத்த தமிழகம் உருவாகவும் வழிவகுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடுகள்)

3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றி சொல்லி முடிக்கட்டும், நான் உங்களை* allow *பண்ணுகிறேன். (குறுக்கீடு) நான் உங்களை* allow *பண்ணுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றி சொல்கிறார்கள். அது முடிந்தவுடன் உங்களை* allow *பண்ணுகிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். நான் உங்களை* allow *பண்ணுகிறேன். (குறுக்கீடு) நன்றி சொல்லி முடிக்கட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றி சொல்லி முடிக்கட்டும். உங்களை நான்* allow *பண்ணுகிறேன். (குறுக்கீடு) விதி 110 ன்கீழ் அறிக்கையினுடைய தொடர்ச்சியாக நன்றி சொல்லி முடிக்கட்டும். (குறுக்கீடு) நான் உங்களை* allow *பண்ணுகிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) நான்* allow *பண்ணுகிறேன் என்று சொல்லும்போது நீங்கள் எழுந்து பேசிக் கொண்டிருப்பது முறையல்ல. நான்தான்* allow *பண்ணுகிறேன் என்று சொல்கிறேன் அல்லவா? (குறுக்கீடு) உங்களுக்குப் பேச நான் வாய்ப்பு தருகிறேன்.* Zero hour-*ல் பேசுவதற்கு அனுமதி அளிக்கிறேன். தொடர்ச்சியாக நன்றி சொல்லி முடிந்துவிடட்டும். நான் உங்களை* allow *பண்ணுகிறேன். (குறுக்கீடு) நான் உங்களை* allow *பண்ணுகிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) நான் உங்களை* allow *பண்ணுகிறேன் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் உங்களை* allow *பண்ணுகிறேன் உட்காருங்கள். (குறுக்கீடு) நான்*

2015 ஆகஸ்ட் 25] [பேரவைத் தலைவர்]

உங்களை allow பண்ணுகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) நான் உங்களை allow பண்ணுகிறேன் என்று சொல்லும்போது, அதற்கு வாய்ப்பு கொடுக்காமல் பிடிவாதமாக, நீங்கள் சொல்வதைத்தான் செய்ய வேண்டுமென்றால் எப்படி? (குறுக்கீடு) இருங்கள், ஒரு அலுவல் முடிந்திருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) தொடர்ச்சியாக, நன்றி சொல்லி முடிக்கட்டும். நீங்கள் உட்காருங்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

4. அம்மா ஆரோக்கியத் திட்டம், முழு உடல் பரிசோதனைத் திட்டம், புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்குதல் உள்ளிட்ட மருத்துவ மேம்பாட்டு நடவடிக்கைகள்—முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள். நன்றி சொல்லக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் சுருக்கமாகச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகிலமே போற்றும் வகையில் ஆன்றோர்கள் எல்லாம் மகிழும் வகையில் அரசியல் வித்தகர்கள்கூட வியக்கும் வகையில் ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, (மேசையைத் தட்டும் ஒலி) எதிரிகளின் சூழ்ச்சிகளையெல்லாம் வீழ்த்தி, (மேசையைத் தட்டும் ஒலி) சதிகளையெல்லாம் தவிடுபொடியாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்தில் மக்கள் தலைவராக அமர்ந்திருக்கிற போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்களை மகிழ்ச்சியோடு வரவேற்பதிலே பாராட்டுவதிலே நாங்கள் எல்லாம் மகிழ்ச்சியடைகிறோம். இன்றைக்கு போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முத்து முத்தாக 22 நலத் திட்டங்களை, வளர்ச்சித் திட்டங்களை (மேசையைத் தட்டும் ஒலி) சுகாதாரத்திலே புரட்சியை ஏற்படுத்துகிறவகையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே விதி 110-ன்கீழே எடுத்து வைத்திருக்கிறார்கள். திருமூலர் சொன்னார்,*